CIKS

# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

காலாண்டுச் செய்திமடல்

அக்டோபர் 2008 மலர் 4 இதழ் 3

மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.



## பயிற்சியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிலரங்கு

காம்பாஸ் திட்டத்தின் ஆசிய உறுப்பினர்கள் ஒன்றாக இணைந்து பயிற்சியாளர்களுக்கான பயிலரங்கு ஒன்றை நடத்தினர். இந்தப் பயிலரங்கு இலங்கையிலுள்ள எப்.ஐ.ஓ.எச். (FIOH) நிறுவனத்தினால் ஆகஸ்டு 25-29ஆம் தேதிகளில், இலங்கையின் தோலங்கமுவா பகுதியில் உள்ள மனித மேம்பாட்டு மையத்தில் (Centre for Human Development) நடத்தப்பட்டது. நமது மையத்தின் சார்பாக சுபாஷிணி ஸ்ரீதர் மற்றும் எம். சுரேஷ் இந்தப் பயிலரங்கில் கலந்து கொண்டனர். காம்பாஸ் ஆசிய திட்டத்தின் ஒருங்கிணைப்பாளரான ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்களும் இதில் கலந்து கொண்டார். இந்தப் பயிலரங்கில் ஆசிய உறுப்பினர்களான இந்தியா, இலங்கை மற்றும் வியட்நாம் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும், நேபாளத்தின் சார்பில் ஒரு பிரதிநிதியும் கலந்து கொண்டனர். இதில், இயற்கை வள ஆதாரங்களை மேலாண்மை செய்யும் பல்வேறு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.



பயிலரங்கில் உரையாற்றும் சுபாஷிணி ஸ்ரீதர்

## பாலினச் சமன் பற்றிய கருத்தரங்கு



கருத்தரங்கில் பங்கு பெற்றவர்களின் கலந்துரையாடல்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் “பாலினச் சமன்” என்ற தலைப்பில் காம்பாஸ் திட்டத்தின் இந்திய உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு ஒன்றை சென்னையில் ஆகஸ்டு 11ஆம் தேதியன்று நடத்தியது. இந்தக் கருத்தரங்கில் காம்பாஸ் திட்டத்தின் இந்திய உறுப்பினர்களான, இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் (CIKS) சென்னை, எப்.ஆர்.எல்.எச்.டி. (FRLHT) பெங்களூர் மற்றும் கர்நாடகாவிலுள்ள க்ருஷி பிரயோக் பரிவார் (KPP) நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்தக் கருத்தரங்கை காம்பாஸ் திட்ட ஆலோசகர் செல்வி. சசி ராஜகோபாலன் அவர்களும், இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் இயக்குனர் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்களும் நடத்தினர். இந்தப் பயிலரங்கில், எல்லா பணி நிலைகளிலும் பெண்களை அமர்த்துவதில் உள்ள இடையூறுகள், திட்டத்தில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் வேளாண் திட்டங்களில் பாலினச் சமனை ஊக்குவிக்கும் முறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.



# செயல் திட்டங்கள் - ஒரு பார்வை

**விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இயற்கைவழி வேளாண்மைத் திட்டம் - II**

இந்தத் திட்டத்தை ஃபோர்ட் நிறுவனத்தின் உதவியுடன் நமது மையம் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்காக காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலிருந்து, சுமார் 200.66 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பருவத்தில் சுமார் 144.90 ஹெக்டேர் நிலத்தில் இயற்கைவழி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழுள்ள பயனீட்டாளர்களுக்கு சுமார் 39 பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில், மக்குஉரம் மற்றும் தாவரக் கரைசல் தயாரிப்பு, பாரம்பரியக் கால்நடைப் பராமரிப்பு முறைகள், உயிர்உரத் தயாரிப்பு, ஒற்றை நாற்று சாகுபடி முறை, பண்ணை நாட்குறிப்பேடு பராமரிப்பு மற்றும் முதலுதவி செயல்முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சிகளின் மூலம் சுமார் 511 விவசாயிகள் பயனடைந்தனர். நமது உயிர்உரத் தயாரிப்பகத்தில், *பாஸ்போபாக்டீரியா, அசிட்டோபாக்டர்* போன்ற உயிர்உரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழுள்ள சுமார் 74 பண்ணைக் குடும்பங்கள் மண்புழு உரத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. ஜூலை 23ஆம் தேதியன்று, முருகமங்கலம் கிராமத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு “இயற்கைவழி சான்றிதழில் அக ஆய்வு செயல்முறைகள்” என்ற தலைப்பில் பயிற்சியாளர் பயிலரங்கு ஒன்று நடத்தப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிரியியல் துறையில் “உயிர்உரத் தயாரிப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் பயன்பாட்டு முறைகள்” என்ற தலைப்பில் இரண்டு பயிற்சிகள் முறையே ஆகஸ்டு 7 மற்றும் 8ஆம் தேதிகளில் நடத்தப்பட்டன. செப்டெம்பர் 23 - அக்டோபர் 1ஆம் தேதிகளில், பெங்களூரிலுள்ள ஐ.எம்.ஓ. (IMO) நிறுவனத்தின் திரு. கிரண் அவர்கள் இந்தத் திட்டத்தின் கீழுள்ள விவசாயிகளின் வயல்களில் புற ஆய்வை மேற்கொண்டார்.

**நெற்பயிர் சாகுபடி - விதை முதல் சந்தை வரை**

பெங்களூரிலுள்ள ஹீவாஸ் (HIVOS) நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சித்திரவாடி, கொளத்தாஞ்சேரி மற்றும் கலியப்பேட்டை கிராமங்களில் மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஜூலை 18 மற்றும் 19ஆம் தேதிகளில், சித்திரவாடி மற்றும் கலியப்பேட்டை கிராம விவசாயிகள் அகணியிலுள்ள தாவரக் கரைசல் தயாரிப்பகத்திற்கும், முருகமங்கலம் கிராமத்திலுள்ள இயற்கைவழி வயல்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். கொளத்தாஞ்சேரி மற்றும் கலியப்பேட்டை கிராமப் பயனீட்டாளர்களுக்கு “மக்கு உரத் தயாரிப்பு முறைகள் மற்றும் மண்புழு உரத்தின் முக்கியத்துவம்” என்ற தலைப்பில் இரண்டு பயிற்சிகள் முறையே ஆகஸ்டு 5 மற்றும் 26ஆம் தேதிகளில் நடத்தப்பட்டன. ஆகஸ்டு 18 மற்றும் 19ஆம் தேதிகளில், கொளத்தாஞ்சேரி இயற்கை விவசாயிகள் சங்க உறுப்பினர்கள் அல்லிவிளாகம் கிராமத்திலுள்ள இயற்கைவழி பண்ணைகளுக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு ஒற்றை நாற்று சாகுபடி முறைகள் மற்றும் அகக் கட்டுப்பாட்டு முறைமை குறித்து மூன்று பயிற்சிகள் செப்டெம்பர் மாதத்தில் நடத்தப்பட்டன. செப்டெம்பர் 23 - 25ஆம் தேதிகளில், பெங்களூரிலுள்ள ஐ.எம்.ஓ. (IMO) நிறுவனத்தின் திரு. கிரண் அவர்கள் இந்தத் திட்டத்தின் கீழுள்ள விவசாயிகளின் வயல்களில் புற ஆய்வை மேற்கொண்டார். அகணி கிராமத்தில், எலும்பு எரு (Bone meal), ராக் பாஸ்பேட் மற்றும் *பாஸ்போபாக்டீரியா* போன்ற இடுபொருட்களைப் பயன்படுத்தி மண்வளத்தை மேம்படுத்துவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டம்**

நமது மையம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டத்தை சீர்காழியில் செப்டெம்பர் 2005 முதல் செயல்படுத்தி வருகிறது. ஆய்வகத்தில் அசுவுணிகள் மற்றும் படைப்புழுக்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. பல்வேறு தாவரக் கரைசல்களைப் பயன்படுத்தி படைப்புழுக்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. வெண்டையில், சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஆய்வுகள் அகணியில் தொடங்கப்பட்டுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறையில் *எபிலாக்னா* வண்டுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. வெண்டையைத் தாக்கக்கூடிய சாறு உறிஞ்சும் பூச்சிகளில் வேப்ப எண்ணெய் சோப்புக் கரைசலால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புள்ளி வண்டுகளில் *(எபிலாக்னா விஜின்டியோக்டோபங்டேடா)* காட்டாமணக்கு மற்றும் *சிறியாநங்கை கஷாயத்தைப்* பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**காம்பாஸ் திட்டம் - II**

இந்தத் திட்டம் காம்பாஸ் நிறுவனத்தின் உதவியுடன் காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மே 2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் நோயியல் துறையுடன் இணைந்து தக்காளியில் ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆகஸ்டு 19ஆம் தேதியன்று, நமது மையத்தின் பணியாளர்களுக்கு “பாரம்பரிய நெல் ரகங்களைப் பற்றிய விவரங்களை ஆவணப்படுத்துதல்” என்ற தலைப்பில் பயிற்சி முகாம் ஒன்றை அண்ணாமலை பல்கலைக்கழக பேராசியர் டாக்டர் ஆனந்தன் அவர்கள் நடத்தினார். சீர்காழி தாலுக்காவிலுள்ள விவசாயிகளுக்கு விதைப்பெருக்கம் செய்வதற்காக பத்து பாரம்பரிய நெல் ரகங்களின் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. மைய நாற்றங்கால் அமைப்பதற்கான நிலத்தேர்வு நடைபெற்று கொண்டிருக்கிறது. காரைக்காலிலுள்ள விதை சான்று வழங்கும் துறையிலிருந்து 21 வேளாண் அலுவலர்கள் நமது அகணி தாவரக் கரைசல் தயாரிப்பகத்திற்கு வந்திருந்தனர். செப்டெம்பர் 20ஆம் தேதியன்று, தீவனப் பயிர் சாகுபடி குறித்து நரப்பாக்கம் கிராம விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி நடத்தப்பட்டது. செப்டெம்பர் 13ஆம் தேதியன்று, விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் 25 விவசாயிகளும், நான்கு விஞ்ஞானிகளும் கலந்து கொண்டு பாரம்பரிய வேளாண் செயல்முறைகள் குறித்து விவாதித்தனர்.

**விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான இயற்கைவழி காய்கறிச் சாகுபடி திட்டம்**

நமது மையம் மும்பையிலுள்ள சர் ரத்தன் டாடா டிரஸ்டின் உதவியுடன் விவசாயிகளின் வாழ்க்கைத்

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

தரத்தை மேம்படுத்துவதற்கான இயற்கைவழி காய்கறிச் சாகுபடி என்னும் திட்டத்தை திண்டுக்கல் மாவட்டத்தில் பாசன வசதியுள்ள பகுதிகளில் நவம்பர் 2007 முதல் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், சுமார் 8.2 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அதில் இயற்கைவழியில் காய்கறிச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஜூலை 16 - 18ஆம் தேதிகளில், எஸ்.புதூர், டி.புதுப்பட்டி மற்றும் கரடிப்பட்டி கிராமப் பயனீட்டாளர்களுக்கு நான்கு பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில், மண்வள மேம்பாடு, மக்கு உரம் மற்றும் தாவரக் கரைசல் தயாரிப்பு செயல்முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழுள்ள பதினோரு விவசாயிகள் மண்புழு உரத் தயாரிப்பில் ஈடுப்பட்டுள்ளனர். செப்டெம்பர் 23 மற்றும் 25ஆம் தேதிகளில், முதலுதவி செயல்முறைகள் குறித்து 41 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு "இயற்கைவழி காய்கறிச் சாகுபடி நுட்பங்கள்" குறித்து இரண்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன.

### இயற்கைவழி காய்கறித் தோட்டங்களின் மூலம் மதிய உணவுத் திட்டத்தை மேம்படுத்துதல்

இந்தத் திட்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் தமிழ்நாட்டிலுள்ள நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஜூன் 2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளில் திட்டச் செயல்முறைகள் குறித்த பயிற்சிகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு பள்ளியிலும் "இயற்கைக் குழு" என்ற பெயரில் 20 பேர் அடங்கிய குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு "மக்கு உரத் தயாரிப்பின் முக்கியத்துவம் மற்றும் மண்புழு உரத் தயாரிப்பு" என்ற தலைப்பில் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில் சுமார் 180 மாணவர்கள் பங்கு பெற்றனர். இந்தத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் ஐந்து மண்புழு உரத் தொட்டிகளும், மூன்று குளுமைத் தொட்டிகளும் (Cool Chamber) கட்டப்பட்டுள்ளன. செப்டெம்பர் 18ஆம் தேதியன்று, ஒருங்கிணைப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு இயற்கைவழி வீட்டுக் காய்கறித் தோட்டத்தின் முக்கியத்துவம் குறித்தும், மண்புழு உரத் தயாரிப்பு குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

### சுக்கன்கொல்லையில் நடந்த பணிகள்

சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வு பண்ணையில் 23 பாரம்பரிய காய்கறி ரகங்களும், 46 பாரம்பரிய நெல் ரகங்களும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதைத் தவிர நான்கு பாரம்பரிய நெல் ரகங்கள் ஒற்றை நாற்று சாகுபடி முறைக்காக நாற்றங்காலில் விதைக்கப்பட்டுள்ளன. மேலும், பசுந்தாள் உரப் பயிர்களும், பல்வேறு காய்கறிகளும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

### திருச்சியில் நடைபெற்ற கருத்தரங்கு

ஜூலை 12ஆம் தேதியன்று, "கிராமப்புற மேம்பாட்டில் சுய உதவிக் குழுக்கள்" என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கு ஒன்று திருச்சியில் உள்ள அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆய்வு மையத்தில் நடைபெற்றது. நமது மையத்தின் சார்பாக சுபாஷிணி ஸ்ரீதர் மற்றும் பி. கிருத்திகா ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு "கிராமப்புற மேம்பாட்டிற்கான இயற்கைவழி வேளாண்மை : பெண்கள் சுயஉதவி குழுக்களின் பங்கு" என்ற தலைப்பில் உரையாற்றினர். இந்தக் கருத்தரங்கில் கேரளா, கர்நாடகா, டில்லி மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 50 விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர்.

### மலேசியப் பயணம்

ஜூலை 20-25ஆம் தேதிகளில், ஆ.வே. பாலசுப்பிர மணியன் அவர்களும், கே. விஜயலட்சுமி அவர்களும் பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தின் (Consumers Association of Penang (AP)) அழைப்பின் பேரில் மலேசியாவிற்கு சென்றிருந்தனர். இந்தச் சங்கத்தினால், ஜூலை 23ஆம் தேதியன்று, கோலாலம்பூரிலுள்ள மலேயா பல்கலைக்கழகத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு "பாரம்பரிய அறிவை அடிப்படையாகக் கொண்டு தற்சார்பு வேளாண்மையை வளர்த்தல்" என்ற தலைப்பில் ஆ.வே. பாலசுப்பிர மணியன் அவர்கள் உரையாற்றினார். இதை தொடர்ந்து, ஜூலை 24ஆம் தேதியன்று, பினாங்கு பயனீட்டாளர் சங்கமும், யு.என்.டி.பி. (UNDP)யும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு தற்சார்பு முறை வேளாண்மையை விரிவுப்படுத்துவதில் சி.ஐ.கே.எஸ்-ன் முயற்சிகள் என்ற தலைப்பில் கே. விஜயலட்சுமி அவர்கள் உரையாற்றினார்.

### பணியாளர்களுக்கான பயிற்சி முகாம்

நமது மையத்தின் தொழில்நுட்பப் பணியாளர் களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி முகாம் ஜூலை 29 - 31ஆம் தேதிகளில் ஏலகிரியில் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி முகாமில் சுமார் 14 தொழில்நுட்பப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இதில், இயற்கைவழி வேளாண்மைத் திட்டங்களைக் கிராமங்களில் செயல்படுத்துவது, ஆவணப் பராமரிப்பு மற்றும் இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்களை முறைப்படுத்துதல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

### பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் குறித்த கருத்தரங்கு

சென்னையிலுள்ள ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் "சீதோஷ்ணநிலை மாற்றம் ஏற்பட்டுள்ள இந்த காலக்கட்டத்தில் வேளாண் பல்வகைமையைப் பாதுகாத்து பராமரித்தல்" என்ற தலைப்பில் சர்வதேச கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. இந்தக் கருத்தரங்கில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆகஸ்டு 8ஆம் தேதியன்று, கலந்து கொண்டு "இந்தியப் பாரம்பரிய அறிவை வளர்ப்பதன் மூலம் தற்சார்பு வேளாண்மைச் செயல்முறைகள் மற்றும் உயிரின பல்வகைமையை மேம்படுத்துதல்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

### மருத்துவ முறைகள் குறித்த உரை

ஆகஸ்டு 18ஆம் தேதியன்று, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் பேராசியர் ஜெர்ரி பொடேக்கர் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார். அவர் மையத்தின் தொழில்நுட்பப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார். இதைத் தொடர்ந்து, இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையமும், பாரம்பரிய மருத்துவ ஆராய்ச்சி மையமும் (Center for Traditional Medicinal Research) இணைந்து ஏற்பாடு செய்த கூட்டத்தில் பேராசியர் ஜெர்ரி பொடேக்கர் அவர்கள் கலந்து கொண்டு "உலகளவில் காணப்படும் பாரம்பரிய மருத்துவ முறைகள் : இந்தியாவில் அவற்றுக்கான எதிர்காலம்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

### ஆயுர்வேத மாநாடு

ஆகஸ்டு 21 - 24ஆம் தேதிகளில், கோயமுத்தூரிலுள்ள ஆரிய வைத்திய மருந்தகம், அதன் நிறுவனர் ஆரிய வைத்தியர் ராம வாரியரின் நூறாவது பிறந்த ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக ஆயுர்வேத மாநாடு ஒன்றை நடத்தியது. இந்த மாநாட்டில், ஆகஸ்டு 24ஆம் தேதியன்று, ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டு "பாரம்பரிய நெல் மற்றும் காய்கறி ரகங்களின் ஊட்டச்சத்து மற்றும் மருத்துவக் குணங்கள் : இதை குறித்த ஆய்விற்கான அவசியம்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

### இலங்கை பயணம்

ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் இலங்கையிலுள்ள பெரதேனியா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள இலங்கை அரசின் இயற்கைவழி வேளாண்மைத் தேசிய மையத்திற்கு ஆகஸ்டு 29ஆம் தேதியன்று சென்றிருந்தார். அங்கு அவர் மையத்தின் இயக்குனர் பேராசிரியர் சரத் பண்டாரா அவர்களையும், மையத்தின் இதர பேராசிரியர்களையும் சந்தித்து உரையாடினார்.

### மண் பரிசோதனை குறித்த பயிற்சி

செப்டெம்பர் 20 மற்றும் 21ஆம் தேதிகளில், நமது மையத்தின் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு "மண் பரிசோதனை" என்ற தலைப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சியை புதுக் கல்லூரியின் (New College) உயிரித் தொழில்நுட்பவியல் துறையின் தலைவர் மற்றும் பேராசிரியர் டாக்டர் சுல்தான் இஸ்மாயில் அவர்களும், டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி கலை மற்றும் அறிவியல் பெண்கள் கல்லூரியின் நுண்ணுயிரியியல் துறையின் விரிவுரையாளர் திருமதி. தாட்சாயிணி அவர்களும், புதுக் கல்லூரியைச் சேர்ந்த திரு. பாலாஜி அவர்களும் நடத்தினர். இதில் மண் பரிசோதனையின் பல்வேறு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

## புத்தகங்களும் வீடியோ படங்களும்

### இயற்கைவழி வேளாண்மையில் குழுச் சான்றிதழ் - வழிகாட்டி கையேடு



இந்தக் கையேட்டில் சிறு மற்றும் குறு விவசாயிகள் குழுக்களாக இணைந்து இயற்கைவழி வேளாண்மைத் தரச் சான்றிதழைப் பெறுவதற்கு தேவையான அனைத்து விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இதில், விவசாயிகளைக் குழுக்களாக ஒன்றிணைத்தல், அகக் கட்டுப்பாட்டு முறைமையை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல், அகக் கட்டுப்பாட்டு முறைமைக் கையேட்டை உருவாக்குதல், நிலத்தேர்வு, பாதிப்புகளை ஏற்படுத்தும் சூழ்நிலைகளைக் கையாளுதல், விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல், விளைபொருட்களின் இயற்கைத் தரத்தைப் பாதுகாத்தல் போன்ற அனைத்து விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இது இயற்கைவழி வேளாண்மைத் தரச்சான்றிதழைப் பெற விரும்பும் சிறு விவசாயிகள் குழுக்களுக்கான முழுமையான கையேடாகும்.

இந்தக் கையேட்டுடன், விவசாயிகளுக்கு இயற்கைவழி குழுச் சான்றிதழ் குறித்து பயிற்சி அளிக்க உதவும் குறுந்தகடும் தயாரிக்கப்பட்டுள்ளது.

***இந்தக் கையேட்டைப் பெற விரும்புவோர் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தைக் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.***

## வருகையாளர் பதிவேடு

- *ஜூலை 4ஆம் தேதியன்று, ஹைதராபாத்திலிருந்து காம்பாஸ் திட்ட ஆலோசகர் செல்வி. சசி ராஜகோபாலன் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *ஜூலை 19ஆம் தேதியன்று, ஹீவாஸ் (HIVOS) நிறுவனத்தின் பெங்களூர் அலுவலகத்திலிருந்து திரு. பிஷ்வதீப் கோஷ் மற்றும் டாக்டர் முரளி அவர்களும், நெதர்லாந்திலுள்ள ஹீவாஸ் தலைமை அலுவலகத்திலிருந்து திரு. ஜான் ஹாலந்த் அவர்களும் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.*
- *ஆகஸ்டு 18ஆம் தேதியன்று, அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் இளங்கலை வேளாண் மாணவர்கள் பதினைந்து பேர் சீர்காழியிலுள்ள நமது பூச்சி வளர்ப்பு ஆய்வுக் கூடத்திற்கு வந்திருந்தனர்.*
- *ஆகஸ்டு 23ஆம் தேதியன்று, வால்பாறையிலுள்ள ரெயின்பாரஸ்ட் ஆய்வுக் கூடத்திலிருந்து டாக்டர் திவ்யா முடப்பா அவர்கள் வந்திருந்தார்.*
- *ஆகஸ்டு 31 - செப்டெம்பர் 2ஆம் தேதிகளில், மும்பையிலுள்ள சர் தோராப்ஜி டாடா டிரஸ்டின் தணிக்கை ஆலோசகர் செல்வி. ரோஸ்மீன் சுரானி அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *செப்டெம்பர் 6ஆம் தேதியன்று, நெதர்லாந்திலுள்ள ஹீவாஸ் நிறுவனத்தின் இளம்நிலை திட்ட அலுவலர் செல்வி. மார்கிரேட் அவர்கள் நமது சுக்கன்கொல்லை ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தார்.*
- *செப்டெம்பர் 7ஆம் தேதியன்று, மும்பையிலுள்ள சர் தோராப்ஜி டாடா டிரஸ்டின் திட்ட அலுவலர் திரு. பாஸ்கர் மித்ரா அவர்கள் நமது சுக்கன்கொல்லை பண்ணைக்கு வந்திருந்தார். மேலும், நமது கள அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.*
- *செப்டெம்பர் 16 மற்றும் 17ஆம் தேதிகளில், ஜப்பானிலுள்ள லைப் பவுண்டேஷனைச்* (Life Foundation) *சேர்ந்த திரு. ஹிரோஷி பிங்கோ அவர்களும் காந்திகிராம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. சிவக்குமார் அவர்களும் நமது சென்னை மற்றும் களஅலுவலகங்களுக்கு வந்திருந்தனர்.*
- *செப்டெம்பர் 25ஆம் தேதியன்று, பெங்களூரிலுள்ள சிர்ரஸ் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ்* (*Cirrus Management Services*) *நிறுவனத்தின் ஆலோசகர் திரு. எம்.எஸ். அசோக் அவர்கள் நமது மையத்தின் சீர்காழி அலுவலகத்திற்கு வந்திருந்தார்.*

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி, து. து. நிர்மலா தேவி & டாக்டர் கே. விஜயலட்சுமி

வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்

நூல்-அஞ்சல்

பெறுநர்

CIKS

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

தொலைபேசி : 91-044-24471087, 24475862

மின்னஞ்சல் : **info@ciks.org** இணையத்தளம் : **www.ciks.org**